ISSN 2394 - 0948

ரூ.100

# பெயல்

அரையாண்டு ஆய்விதழ் அக்டோபர் 2017 - மார்ச் 2018

பெயல் : 04 துளி : 01

PEYAL - An Internationally Refereed Journal of Tamil Studies Volume IV Issue 1



கமில் வி. சுவலபில்
மேரி கியூரி போல்
க. வினோதா
அரங்க. நலங்கிள்ளி
க. அய்யனார்

நா. மம்மது
மா. தினேஷ்வரன்
ச. சீனிவாசன்
ஜோ. செ. கார்த்திகேயன்
பா. மதிவாணன்
செ. மு. நஸீமா பர்வீன்

# தேவை : ஆய்வுகளுக்கான தேசியத் தர நிர்ணய ஆணையம்

முனைவர் ச. சீனிவாசன்

தில்லியைச் சேர்ந்த நூல் வெளியீட்டு நிறுவனம் ஒன்றின், காப்புரிமை பெற்ற ஹிந்தி நூலினைப் பஞ்சாப் மாநிலத்திலுள்ள பல்கலைக்கழகம் ஒன்று முன் அனுமதி பெறாமல் பஞ்சாபி மொழியில் மொழிபெயர்த்து அதே தலைப்பில் வெளியிட்டுள்ளது. இக்குற்றத்திற்காக அந்நூலினை வெளியிட்ட பஞ்சாபி பல்கலைக்கழகம் மீது தில்லியிலுள்ள அப்புத்தக நிறுவனம் வழக்குத் தொடர்ந்துள்ளது. இவ்வழக்கு கல்வியாளர்கள், நூல் வெளியீட்டாளர்களிடையே கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

அடுத்தவர்களுடைய எழுத்து/கருத்து/அறிவுச் சொத்துக்கள் (Intellectual Property) எனும் சிந்தனைச் செல்வங்களைத் தமது சொந்தக் கருத்துக்களாக்கிப் படைப்புகளை, நூல்களை உருவாக்கி வருவது ஆய்வுலகில் பெருகிவருகிறது. பிறருடைய ஆய்வு நூல்கள், கட்டுரைகளிலிருந்து கருத்துக்களை வரிகளாகவோ, பத்திகளாகவோ, கணிசமான பக்கங்களாகவோ சில சமயம் கட்டுரையை முழுவதுமாகவோ பெயர்த்தெடுத்துச் சிலர் தங்களுடைய சொந்தக் கருத்துகளாக அச்சிட்டு வெளியிடுகின்றனர். சிலர் குறிப்பிட்ட தலைப்பில் அது தொடர்பாக வெளிவந்துள்ள நூல்கள், கட்டுரைகளிலுள்ள தகவல்கள் அனைத்தையும் திரட்டித் தொகுப்பு என்ற பெயரில் நூலாக வெளியிட்டு வருகின்றனர். இன்னும் சிலர் இணைய தளத்திலிருந்து கருத்துக்களைப் பிடுங்கி வெட்டியும் ஒட்டியும் தனதாக்கிக் கொள்கின்றனர். சுருங்கக் கூறின், பிறருடைய மொழிநடை மற்றும் சிந்தனைக் கருத்துக்களோடு ஒத்த பயன்பாடுடன் அதனைத் தன் சொந்தக் கருத்தாக / படைப்பாகக் குறிப்பிடுவதைக் ‘கருத்துத் திருட்டு’ என வரையறுக்கலாம்.

ஆய்வு நூல்களில் மட்டுமல்லாது, முனைவர் பட்ட ஆய்வுகளிலும் இந்தத் தனதாக்குதல், வெட்டி ஒட்டுதல் எனும் கருத்துத் திருடல்கள் ஏராளமாக நடைபெறுகின்றன. நவீனக் கணினித் தொழில்நுட்ப வசதியைப் பலர் கருத்துத் திருடலுக்காகத் தவறாகப் பயன்படுத்தி வருகின்றனர். மேற்கோள் காட்டுதல், அடிக்குறிப்பிடுதல் எனும் நாகரிகம் குறித்து யாரும் அதிகம் கவலைப்படுவதில்லை. நேர்மை, கடப்பாடு குறித்து நினைத்துப் பார்ப்பதே இல்லை. நேர்மையற்ற இத்தகைய கருத்துத் திருட்டு நிகழ்வுகள் தமிழாய்வுகளில் மட்டுமல்லாமல் அறிவியல் ஆய்வுகளிலும்; சமூக அறிவியல் ஆய்வுகளிலும்; திரைத்துறையிலும் மிகுதியாகக் காணப்படுகின்றன.

தமக்கு வேண்டிய ஆய்வுத் தகவல்களை இணையதளத்திலிருந்து எந்தவித மாற்றத்திற்கும் உட்படுத்தாமல் அப்படியே பதிவிறக்கம் செய்து பயன்படுத்தும் வித்தைகளை ஆய்வு மாணவர்கள் கற்றுவைத்துள்ளனர். தேடும் தகவல்களெல்லாம் இணையதளத்தில் எளிமையாகக் கிடைத்துவிடுவதும் இதற்குக் காரணமாகச் சொல்லப்படுகிறது. கல்வித்துறையில் ஆராய்ச்சி மாணவர்